

*300-340 ஆம் ஆண்டுகளில் பஞ்சாப்பில் உபயோகிக்கப்பட்ட யவுதேய நாணயங்கள்*

*(Yaudheya coinage of Punjab 300-340 AD)*

*வலது கையில் மயிலை பிடித்துக் கொண்டும், இடது கையில் வேதங்களை ஏந்திக் கொண்டு நேராக நின்றபடி காட்சி தரும் கார்த்திகேயர்.*

*முன்புறம் பிராம்மி -யசுதேய கணஸ்ய ஜெயா( யசுதேய மக்களுக்கு வெற்றி)*

*பின்புறம்- இடுப்பில் கை வைத்தவாறு உடல் தெரியம் அளவில் மெல்லிய உடை உடுத்தி நின்று கொண்டு இருக்கும் பெண் தெய்வம்*



மயில் உருவங்களைக் கொண்ட குப்தர்கள் காலத்து நாணயங்கள்

# ஸ்ரீலங்காவில் முருகன் வழிபாடு -தொல்பொருள் ஆராய்சிகளில் கிடைத்த புதிய செய்திகள்

*(Murukan Worship in Sri Lanka: New Archaeological Evidence by P. Pushparatnam)*


மூலக்கட்டுரை ஆங்கிலத்தில்- பீ. புஷ்பரத்தினம்

தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா

(nrj_1945@yahoo.com)


சமீப காலத்தில் தொல்பொருள் ஆராய்சிகளில் கிடைத்துள்ள செய்திகள் ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்களின் சரித்திரத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. என்னைப் பொறுத்தவரை அந்த ஆராய்ச்சியில் கிடைத்துள்ள புதிய தகவல்கள் இரண்டு கோணங்களில் முக்கியத்துவம் பெறுகின்றவையாக உள்ளது எனத் தெரிகின்றது.

முதலாவதாக சரித்திர ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புக்களைப் ஸ்ரீலங்க அரசினர் தமிழ்நாட்டில் இருந்து ஸ்ரீலங்காவிற்கு வந்து குடியேறிய தமிழர்களுடன் பலவேறு கோணங்களிலும் இணைத்தே ஆராய்ந்து கொண்டு இருந்தனரே ஒழிய, ஸ்ரீலங்காவிலேயே பண்டைய காலம் முதல் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்களுடன் அவற்றை ஒப்பிட்டு நோக்கவில்லை. பாலி நூல்களில் உள்ள புராணக் காவியங்கள் ஸ்ரீலங்க தமிழர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ள செய்திகளின் காரணமாகவே இப்படிப்பட்ட நிலைமை தோன்றி இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. இதில் தெரிய வரும் கசப்பான உண்மை என்ன என்றால், இப்படிப்பட்ட செய்திகள் உண்மை என நம்பப்பட்டு வந்ததினால் பண்டைய காலம் முதல் அங்கேயே வாழ்ந்து கொண்டிருந்த ஸ்ரீலங்கா தமிழர்களின்

வரலாற்று பின்னணிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. ஸ்ரீலங்கா தமிழர்களின் வாழ்க்கை வரலாறு தமிழ்நாட்டின் பெருமையை பறை சாற்றுவதாகவே உள்ளது என நம்பப்பட்டது. ஆனால் தற்பொழுது கிடைத்துள்ள ஆதாரங்கள் முந்தைய தவறான கண்ணோட்டங்களையும் பழைய கண்டு பிடிப்புக்களின் முடிவுகளையும் வலுவிழக்கச் செய்து விட்டது.

இரண்டாவதாக, சமீபகால ஆராய்ச்சியில் கிடைத்த செய்திகளினால், ஸ்ரீலங்காவில் முன்பு இருந்த தமிழர்களின் கலாச்சாரமும் பண்பும் தமிழ்நாட்டில் இருந்து சென்று குடியேறிய தமிழர்கள் மூலமே பரவியது என்று நம்பப்பட்ட செய்திகள் தவறானது எனவும், பண்டைய ஸ்ரீலங்கா தமிழர்கள் தங்களுக்கென பல கலாச்சார பண்பாடுகளை வைத்துக் கொண்டு அதில் வாழ்ந்து கொண்டு இருந்தனர் என்ற உண்மையையும் தெரிவித்தது. அதனால் பண்டைய ஸ்ரீலங்கா தமிழர்களின் நிலைபாடுகளைப் பற்றிய தவறான தகவல்களைக் களைந்துவிட்டு அவர்களின் உண்மை வரலாற்றுச் செய்திகளை புதியதாக விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இப்படி திருத்தி எழுதவதினால் பண்டைய ஸ்ரீலங்கா தமிழர்கள் வழக்கத்தில் கொண்டு இருந்த வழிபாட்டு முறைகளில் மாற்றம் எற்படப் போவது இல்லை. ஆகவே இப்போது கிடைத்துள்ள புதிய ஆராய்ச்சித் தகவல்கள், முக்கியமாக அதில் கிடைத்துள்ள நாணயங்கள் மற்றும் உலோகங்களின் அடிப்படையிலேயே இந்த கட்டுரை எழுதப்பட்டு உள்ளது.

முன்னர் ஆராய்ச்சிகள் மேற்கொண்டவர்கள் அங்கெல்லாம் கிடைத்த நாணயங்கள் மற்றும் உலோகங்களின் மீது தங்களுடைய கவனத்தை முழுமையாக செலுத்தாமல் இருந்தனர். அதன் பின்னர் குஷானா, சடவாஹனா மற்றும் சங்க காலங்களைப் பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொண்டவர்கள்- ஆசியாவின் தென் பகுதிகள், முக்கியமாக தமிழ்நாடு, ஸ்ரீலங்கா போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று அங்கெல்லாம் ஆராய்ச்சியை மேற் கொண்டு பொழுது - அந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் மற்றும் உலோகங்கள் மீது அவர்கள் கவனம் செல்லத் துவங்கியதின் காரணமாக அவற்றை பற்றியும் ஆராயத் துவங்கினர். இந்த ஆராய்ச்சி கட்டுரை ஸ்ரீலங்காவில் இருந்த பல்வேறு இனப் பிரிவுகள் பயன்படுத்திய நாணயங்களின் முக்கியத்துவத்தை மையமாக வைத்துக் கொண்டு எழுதப்பட்டு உள்ளது.

மூன்றாம் நூற்றாண்டில் ஸ்ரீலங்காவில் இருந்த இந்து மதப் பிரிவுகளான சைவ, வைஷ்ணவ, மற்றும் புத்த மதங்கள் அந்த தீபகற்பத்தின் முன்னேற்றத்தில் தங்கள் பங்கினை செலுத்தி வந்துள்ளனர். கி.மு 800 ஆம் ஆண்டுக்கு முன்பாக ஸ்ரீலங்காவில் கிடைத்த மண்பாண்டங்கள், லிங்கம் போன்ற கலைப் பொருட்கள், உலோக சிலைகள் மற்றும் பல்வேறு பகுதிகளிலும் காணப்பட்ட கிறுக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் மூலம் அங்கு இருந்த மதப் பிரிவுகளைப் பற்றி அறிந்து கொள்ள முடிந்தது. மூன்றாம் நூற்றாண்டில் புத்த மதம் தோன்றிய பின் அந்த தீபகற்பத்தின் மதசார்ப்புக் கொள்கை முற்றிலும் மாறுபடத் துவங்கியது. நவநாகரீகமான கொள்கைகளைக் கொண்ட இனப் பிரிவுகள் மக்களிடையே பெரும் ஆதரவைப் பெற்றன. ஆனால் அதே சமயத்தில் இந்து மதம் எந்த விதத்திலும் தன்னை அழிக்க விடாமல் அந்த தீபகற்பத்தில் இருந்த தமிழ் மக்களுடைய ஆதரவுடன் தொடர்ந்து வளர்ந்து வந்தது. பாலி இலக்கியங்களான தீபவம்சா, மஹாவம்சா மற்றும் குலவம்சா

போன்ற நூல்கள் புத்த மதத்தைப் பற்றி மட்டுமே மிக உயர்வாக எழுதி, இந்து மதப் பிரிவுகளுக்குத் கிடைக்க வேண்டிய பெருமையை அளிக்கவில்லை.( மஹாவம்சா X: 102, XIX: 37, XXI: 1-21, XXII: 3-4). இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் வரலாற்று உண்மைகள் சரியான முறையில் விளக்கப்படாமல் இருந்து விட்டதினால், அந்த தீபகற்பத்தில் பண்டைய காலத்தில் புழக்கத்தில் இருந்த நாணய, உலோகங்களைப் பற்றி ஆராய வேண்டிய அவசியம் எழுந்தது. அந்த ஆராய்ச்சியில் குமாரா என்ற ஸ்கந்தன் அல்லது தமிழ் முருக பக்தி வழிபாடு ஏற்கப்பட்டு இருந்த உண்மையை வெளிப்படுத்தும் விதத்தில் உபயோகிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நாணயங்கள் ஆராயப்பட்டதில் வரலாற்று உண்மைகளுக்கு புதிய செய்திகள் கிடைத்தன.

ஐரோப்பிய ஆராய்வாளர்கள் 18 ஆம் நூற்றாண்டில்தான் முதல் முதலாக எந்த காலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டனரோ, அந்த கால கட்டத்தில் புழக்கத்தில் இருந்த நாணயங்களையும முக்கியப் பொருளாகக் கருத்தில் கொண்டு அவற்றையும் தங்கள் ஆராய்ச்சியில் இணைத்துக் கொண்டனர். இப்படியாக இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி மையத்தினைச் சேர்ந்த சில ஐரோப்பிய அதிகாரிகள்தான் புதைப் பொருள் ஆராய்ச்சியில் கிடைத்த நாணயங்களை 19 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற ஆய்வுக்குப் உட்படுத்தினர்.

ஸ்ரீலங்காவில் இரண்டாம் நூற்றாண்டில் உபயோகப்படுத்தப்பட்ட நாணயங்களும் உலோகங்களும் ஆராய்வாளர்களுடைய முக்கிய கவனத்தை ஈர்த்தது. கல்வெட்டுக்களில் கிடைத்த விவரங்களின் அளவில் இல்லாவிடிலும், நாணயங்களில் காணப்பட்ட பெயர்கள், எழுத்துக்கள், அல்லது சில சின்னங்கள் வெளிக் காட்டிய செய்திகள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருந்ததால் குறிப்பிட்ட சில வம்சங்களின் வரலாற்றை ஆராயவும், அவற்றை கோர்வையாக எழுதவும் உதவிகரமாக இருந்தது. ஸ்ரீலங்கா பூர்வீகத் தமிழர்கள் உபயோகப்படுத்திக் கொண்டு இருந்த நாணயங்கள் சில தற்பொழுது கிடைத்து உள்ளன. அவை கி.மு மூன்றாம் ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 17 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சார்ந்து இருந்தன. அவற்றின் மூலம் பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட மொழிகள், எழுத்துக்கள், ஆட்சியாளர்கின் தன்மை, அவர்கள் குடியேறிய பகுதிகள், வாணிபம் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புக்கள் என அனைத்தையும் அறிந்து கொள்ள முடிந்தது.

அவற்றில் காணப்பட்ட வடிவங்கள், எழுத்துக்கள் (பிராம்மி அல்லது தமிழ்), சின்னங்கள் அல்லது முத்திரைகள், ஆண்-பெண் கடவுட்கள், தெய்வங்களின் பெயர்கள் போன்றவை வரலாற்று பிழைகளைத் திருத்தி அமைக்க உதவும். அதைத் தவிற அப்பொழுது நிலவிய சமுதாய கலாச்சாரங்கள், அரசியல் நிலைமைகள், மற்றும் மத வழிபாடுகள் போன்ற அனைத்தையும் தெரிந்து கொள்ளவும் நாணயங்கள் பெரிதும் உதவும். இதுவரை கிடைத்துள்ள தகவல்கள் முருக வழிபாடு அந்த தீபகற்பத்தில் எந்த அளவு பரவி இருந்தது என்பதை ஓரளவு் தெரிவிக்கின்றது. முருகனுடைய ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் அவருக்கிருந்த மற்ற பெயர்கள் போன்றவை அந்த நாணயங்களில் பொறிக்கப்பட்டு உள்ளன. இவை முருக வழிபாடு ஸ்ரீலங்காவில் எந்த அளவு புகழ் பெற்று இருந்தது என்பதையும் தெரிந்து கொள்ள உதவியது.



## தொல்பொருள் ஆராய்ச்சிகளில் கிடைத்த சில நாணயங்கள்

ஸ்கந்த-கார்த்திகேய வழிபாட்டை ஆரியர்கள் கடைபிடிக்கத் துவங்கியதற்கு வெகு காலம் முன்னிருந்தே தமிழர்கள் முருக வழிபாட்டை பக்தி பூர்வமாக செய்து கொண்டு இருந்துள்ளனர். சங்க காலத்தில் குறிஞ்சி மலைப்பகுதியில் இருந்த தினை என்று கூறப்பட்ட நிலப்பரப்பில் முருகனே முக்கியமான கடவளாக ஏற்கப்பட்டு இருந்துள்ளார். ( காளிதாஸ் 1976-58). அவருக்கு சூட்டப்பட்டிருந்த பல பெயர்கள் பல்வேறு இலக்கிய நூல்களிலும் காணப்படுகின்றன. அவரை முருகன் எனவும் (அகநாநூறு 22-11, புறநாநூறு 56-11, நாரிணை 47-10, ) , செவ்வேல் எனவும் (மதுரைக்கன்சி 1.611, நார்ரிணை 254, குறுன்தொகை 53-3), மன்னையான் என்றும் ( திருமுருகாற்றுப்படை 1.201), வீரமயில் மேல் நாயிரு, அதாவது மயில் மீது ஏறிய சூரியன் ( பரிபாடல் 18-25), மற்றும் வேறு பல பெயர்களிலும் (காளிதாஸ் 1999 73-90). அழைத்து உள்ளனர்.

சமிஸ்கிருத ஸ்கந்த கார்த்திகேயர் வழிபாடும் தமிழ் முருக பக்தியுடன் ஒத்து இருந்தது என்ற கருத்து (உதாரணமாக காளிதாஸனின் குமாரசம்பவம்) பல இலக்கியங்களில் (திருமுருகாற்றுப்படை) காணப்பட்டது. தமிழ் முருகனும் வடநாட்டு ஸ்கந்தனும் எந்த அளவு ஒன்றிணைந்து இருந்தனர் என்பதை கமில் ஸ்விலபெல (**Kamil Zvelebil**), பிரெட் கோத்தி (**Fred Clothey**) மற்றும் ராஜு காளிதாஸ் (**Raju Kalidos**) போன்றவர்கள் கோடிட்டுக் காட்டி உள்ளனர்.

பண்டைய தமிழ்நாட்டில் முருக வழிபாடு துவங்கிய காலகட்டத்திலேயே ஸ்ரீலங்காவிலும் முருக வழிபாடு துவங்கி இருக்கிறது என்று கருதப்படுவதினால் தமிழ்நாடு மற்றும் அந்தப் பகுதிகளில் இருந்துதான் ஸ்ரீலங்காவில் இருந்தவர்கள் அதற்கான ஊக்கம் பெற்று இருக்க வேண்டும். அடிகநல்லூரில் (**Aticcanallûr**) கிடைத்த ஆவணங்கள் முருக வழிபாட்டு முறை உலகில் நாகரீகம் தோன்றுவதற்கு முன்னரே தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது. அதுபோன்ற பொருட்கள் ஸ்ரீலங்காவில் பூம்பரிப்பூ, ( **Pomparippu**) அனுராதபுரா (**Anuradhapura**), பின்விவா (**Pinveva**), கன்தரோடை(**Kantarotai**), மற்றும்

புனக்காரி (Punakari) போன்ற இடங்களிலும் கிடைத்து உள்ளன. அங்கு கிடைத்துள்ள சில சின்னங்கள் முருகனின் வேல், சேவல் போன்றவை ஆகும்.( சிற்றம்பலம் 1995-182, புஷ்பரத்தினம் 1991-38)

5 ஆம் நூற்றாண்டின் பின் வந்த பாலி இலக்கியங்களில், பிராம்மி கல்வெட்டுக்களில் உள்ளது போலவே பெரும் பல பெயர்கள் காணப்படுகின்றன. ஒய். சுப்பராயுலு என்ற பேராசிரியர் (1989-92-103) கூற்றின்படி அவரவர்கள் சார்ந்துள்ள மதக் கடவுளுடைய பெயர்களை தனி மனிதர்களுக்கு வைப்பது இந்தியர்களின் புராதானப் பழக்கங்கில் ஒன்று. பேராசிரியர் பீ. பரனவிதானா (Paranavitana 1970) ஸ்ரீலங்காவின் பிராம்மி கல்வெட்டுக்களில் காணப்பட்ட முருகனின் பொருட்கள் தனி மனிதர்களுடைய பெயர்களாக இருந்தன எனவும் அவற்றுக்கு உதாரணமாக வேல் என்ற பெயரைக் குறிப்பிட்டுக் காட்டி உள்ளார். இந்தியாவிலும் ஸ்ரீலங்காவிலும் இப்படிப்பட்ட பெயர்கள் சாதாரணமானவை. உதாரணமாக வேலப்பன் என்ற பெயர் சங்க இலக்கியங்களில் ( காளிதாஸ சுப்பிரா) இருந்த வேலன் என்பதை ஒட்டி இருந்தது. இவை வேலனிடம் மக்களிடையே இருந்த பக்தியைக் காட்டுகின்றது.

சமிஸ்கிருத ஸ்கந்த வழிபாட்டு தொடர்ச்சியின் பலனாக குமாரா, மகாசேனா, விஷாகா போன்ற (காளிதாஸ் 1999 சுட்டிக்காட்டிய அமரகோசாவில் காணப்பட்ட ஸ்கந்தனைக் குறிக்கும் பெயர்கள் ) பெயர்கள் புழக்கத்தில் வந்தன. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வியாபாரி ஒருவரின் பெயர் விசாகா என்று இருந்ததாக வடக்கு ஸ்ரீலங்கப் பகுதியில் இருக்கும் பெரியபுளியாங்குளம் என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டு மூலம் தெரிந்தது. (பரனாவிதனா 1970- 356-357) . அதைப் போன்ற பெயர் ஒன்று மண் பாண்டத்தில் எழுதப்பட்டிருந்த வார்த்தைகளில் இருந்தது. அந்த மண்பாண்டம் கோடுமன்னால் என்ற இடத்தில் ஆராய்ச்சியில் இருந்த தமிழ் பல்கலைக் கழகத்தினால் கண்டு பிடிக்கப்பட்டது (ராஜன் 1994-82). இவை அனைத்தும் அந்த காலத்தில் இருந்த முருகன்- ஸ்கந்தன்னுடைய பக்தி வழிபாட்டிற்கு எடுத்துக் காட்டாக அமைந்து உள்ளது என பரனாவிதனா கூறி உள்ளார். (பரனாவிதனா 1970- CXXII) தென் ஸ்ரீலங்காவில் அக்குரகோடா என்ற இடத்தில் கிடைத்த நாணயத்தில் பிராம்மியில் மகாகட்டான் என எழுதப்பட்ட வார்த்தை பின்புறம் இருக்க முன்புறம் மயில் வடிவம் உள்ளது. (Bopearachchi 1999:54, Pushparatnam 2001: 43). அது போல இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு நாணயம் வடக்கு ஸ்ரீலங்காவில் கந்தரோட்டை என்ற இடத்தில் கிடைத்தது. அதில் தமிழ் பிராம்மியில் உதிப்பான் என பின்புறம் எழுதப்பட்டும் , முன்புறம் ஸ்ரீவத்சா எனவும் காணப்படுகின்றது. ( சேயோன் 1990, புஷ்பரத்தினம் 2001 )

ஸ்ரீவத்சா மற்றும் மயில் போன்றவை தமிழர்களுடைய மத நம்பிக்கையைக் காட்டுகின்றது. மயிலே முருகனின் வாகனமாக இருந்தது என்பதற்கு சங்க இலக்கியங்களில் நிறைய ஆதாரங்கள் தரப்பட்டுள்ளன. ( புரானாநூறு 65, திருமுருகாற்றுப்படை 1.201). ஆக முருகனின் புகழ் எந்த அளவு பரவி இருந்தது என்பதை நாணயங்கள் பறைசாற்றின. இரண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டுகளில் ஸ்ரீலங்காவில் சதுரமான நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன எனத் தெரிகின்றது. அவற்றில் பிரணவ எழுத்தான ஓம் என்ற

வார்த்தை, ஸ்ரீவத்சா, லஷ்மி, யானை, தாமரை, திரிசூலம், மாடு, சிவலிங்கம் போன்றவை இருந்தன. ( பார்கர் 1981,461-482, பெரீஸ் 1919 40-67, போபியாரச்சி 1999, சிற்றம்பலம் 1992 151-158, சிவசாமி 1970 1-10, மற்றும் புஷ்பரத்தினம் 2001 90-100). இவை அனைத்தும் ஸ்ரீலங்கா தமிழர்கள் பின்பற்றிக் கொண்டு இருந்த மத வழிபாட்டின் தன்மைக்கு எடுத்துக்காட்டு ஆகும். மயில், வேல், சேவல் போன்ற சின்னங்களைக் கொண்ட நாணயங்களின் கண்டுபிடிப்பு பண்டை காலத்தில் நிச்சயமாக முருகன் பக்தி வழிபாடு இருந்திருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

அதே காலகட்டத்தினை சார்ந்த ஸ்கந்த-முருகன் பெயர் கொண்ட நாணயங்கள் இந்தியத் துணை கண்டத்திலும் கிடைத்தன. ( குப்தா 1966 187). தமிழ் இலக்கியங்களில் முருகன் பெயரை வடிவேலன் ( சிலப்பதிகாரம் 1-2, 49-50) , வேல் வேலன் ( கலித்தொகை 28-26) எனவும் குறிப்பிடப்பட்டு உள்ளது. ஆரியர்களுடன் தொடர்பு ஏற்பட்டப் பின்னரே சேவல் என்ற சொல் வந்ததாகக் கூறப்பட்டாலும் தமிழர்களுடைய வழிபாட்டு முறைகளில் ஆதிகாலம் முதலேயே அது இருந்துள்ளது.( காந்திதாஸன் 1988-120)

மத்திய காலத்தினைச் சேர்ந்த தமிழ் நாணயங்களில் முருகனுடைய சின்னங்களைத் தவிற அவருக்கிருந்த வேறு பெயர்களும் பொறிக்கப்பட்டு இருந்ததைக் காண முடிந்தது. ஜாப்னாவில் இருந்த நல்லுர் மன்னன் 13-17 ஆம் நூற்றாண்டில் இப்படிப்பட்ட நாணயங்களை வெளியிட்டு உள்ளார். நாணயங்களின் முன்புறம் மன்னனின் தலையும் பின்புறம் சிவனுடைய வாகனமான நந்தியும் அதை நோக்கியபடி அமர்ந்து உள்ள மயிலும் , சேது என்ற வார்த்தையும் காணப்பட்டன

மயில் முருகனின் வாகனம். நந்தியோ அவருடைய தந்தை சிவனுடைய வாகனம். இது சிவன் மற்றும் முருகனுக்கு இடையே தந்தை- மகன் என்ற உறவு இருந்ததை எடுத்துக் காட்டுகின்றது. சில நாணயங்களில் மயிலுக்குப் பதில் முருகனின் உருவம் உள்ளது. இந்த ஆசிரியர் சேது என்பதைப் போலவே தமிழ் மன்னர்கள் வெளியிட்டுள்ள நாணயங்களில் 'கன்' மற்றும் ஆ என்று எழுதப்பட்டு இருந்த நாணயங்களையும் கண்டுபிடித்தார். (புஷ்பரத்தினம் 2001 147-159). அவை 14 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவைகளாக இருக்கலாம். மற்றொரு நாணயத்தில் வலதுபக்கம் திரும்பிக் கொண்டு இருந்தபடி மயில் ஒன்று இருக்க அதன் மேல்புறம் சந்திரன் உள்ளது. அதன் பின்புறம் மனிதன் ஒருவன் இருக்க ஈட்டியின் வடிவமும் கன் என்ற வார்த்தையும் உள்ளது. இன்னொரு வகையிலான நாணயத்தில் பாம்பும் மயிலும், மனிதனும் காணப்பட்டது. மனிதன் என்ற உருவம் அதை வெளியிட்ட மன்னனுடைய உருவமோ இல்லை முருகனாகக் கூட இருந்து இருக்கலாம். ஒரே சமயத்தில் தமிழ் பகுதிகளில் அவை அனைத்தும் வெளியிடப்பட்டு இருக்கலாம்.( சீதாராமன் 1966 89-97)

கன், மற்றும் ஆ என்ற எழுத்துக்கள், மயில் மற்றும் பாம்பு போன்ற சித்திரங்களைக் கொண்ட நாணயங்களை வெளியிட்டதின் மூலம் முருக வழிபாடு எந்த அளவு அவர்களினால் மதிக்கப்பட்டு இருந்தது என்பதை வெளிப்படுத்துகின்றது. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருஞானசம்மந்தர் முருகனை கந்தன் என்ற பெயரில் அழைத்தார். ( தேவாரம் 1-19) ஏறத்தாழ அதே கால கட்டத்தில்தான் ஜாப்னாவை சேர்ந்த தமிழ் மன்னன் ஒருவன் தன்

பெயரை 'கந்தர்மலைமலையாறியர்கோன்' ( பத்மநாதன் 1980 409-417) என வைத்துக் கொண்டிருந்திருக்கிறான். கன் என்றும் ஆ என்றும் பொறிக்கப்பட்டுள்ள நாணயங்கள் ஒருவேளை அவனைச் சார்ந்து இருக்கலாம். அவன் தன்னை ஜாப்னாவின் ஆர்யசக்ரவர்த்தி என கூறிக் கொண்டான். அதையே ஆ என்று பொறித்து இருக்கலாம். கந்தன் மற்றும் முருகன் தமிழர் பூமியில் பிரபலமானவர். மயில், பாம்பு மற்றும் வேல் போன்ற வடிவங்களைக் கொண்ட நாணயங்கள் அதை இன்னும் உறுதி செய்கின்றன.

இந்த ஆராய்ச்சிகளினால் ஸ்ரீலங்காவில் பரவி இருந்த முருகன் பக்தி வழிபாடு 14 ஆம் நூற்றாண்டுகளில் எந்த அளவு புகழ் பெற்று இருந்தது எனத் தெரிய வரும். பிற் காலத்தில் ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் காரணமாக ஸ்ரீலங்காவில் பல இடங்கள் முருக வழிபாட்டுட்டின் மேன்மைத் தலங்களாக மாறின. அவற்றில் ஒன்றாக இருக்கும் ன கதிர்காமனில் இந்துக்களைத் தவிற புத்த மதத்தினரும் முருகனை வணங்குகின்றனர். அந்தச் செயல் இரண்டு மதங்களுக்கு இடையிலான வேற்றுமையிலும் அவர்களுக்கு இடையே காணப்படும் ஒற்றுமையைக் காட்டுகின்றது. கந்தர் சஷ்டி கவசத்தில் கதிர்காமனைக் புகழும் விதத்தில் கதிர்காமாட்டுத்துறை கதிர்வேல் முருகன் (**'Katirkāmatturai katirvel Murukan'**) எனக் குறிப்பிட்டுள்ளது. அருணகிரிநாதர் 15 ஆம் நூற்றாண்டில் எழுதிய நூலில் ஸ்ரீலங்காவில் உள்ள தெற்கு திரிகோணமலை, ஜாப்னா மற்றும் கதிர்காமன் என்ற மூன்று இடங்கள் முருக வழிபாட்டில் சிறந்து விளங்கியவை எனக் கூறி உள்ளார். ஸ்ரீலங்காவில் முருகன் கோவில்களை கந்தன் ஆலயம் என்று அழைக்கின்றனர். நாணயத்தில் இருந்த கன் என்பது கந்தனைக் குறிக்கலாம். ஸ்ரீலங்கா பெரும்பாலான கலாச்சார பண்பாடுகளை இந்தியாவில் இருந்தே கற்றிருந்தாலும் அந்த தீபகற்பம் தமக்கென சில கலாச்சார பண்பாடுகளையும் வளர்த்துக் கொண்டு உள்ளது என்பதில் ஐயம் இல்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக முருக பக்தி இயக்கத்தை தன் நாட்டில் வளர்த்துக் கொண்டுள்ள விதத்தைக் கூறலாம்.